எம்.சி.ஓ.பி எண்: 3566/2017 தேதி: 21.04.2025

மசா. : 1

பெயர் : பரத்

த/பெ. : சிவக்குமார்

வயது : 23

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன் . மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ1 முதல் 7 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் நான் மிதிவண்டியில் சென்றேன். எதிரே வந்த வேன் மோதி விபத்து நடந்தது. நான் சாலையின் இடது ஓரமாக சென்றிருந்தால் இந்த விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றாலும் என்னுடைய அஜாக்கிருதைதான் இந்த விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் 9ம் வகுப்பு படித்தேன். விபத்திற்கு பிறகு நான் படிப்பை தொடரவில்லை. நான் படிப்பை தொடரவில்லை என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் 7நாள்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன் என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள மசாஆ 4 ஆவணத்தில் எனக்கு முழுமையாக குணமாகி விட்டது என காணப்படுகிறது என்றால் குணமாகி விட்டது என காணப்படுகிறது. ஆனால் இன்னும் சிகிச்சை பெறுகிறேன். அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. விபத்து சமயத்தில் முதல் எதிர் மனுதாரர் வாகனத்திற்கு காப்பீடு நிலுவை இல்லாத காரணத்தால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் ஏதவாது இழப்பீடு பெறவேண்டுமானால் முதலாம் எதிர்மனுதாரரிடமிருந்துதான் பெறவேண்டும் என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய அஜாக்கிருதையால் நடைபெற்றுள்ள காரணத்தால்

2ம் எதிா்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல.

X

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.